RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s54

OPEN ACCESS

# கா. சிவத்தம்பியின் பார்வையில் திராவிடக் கருத்துநிலை

**ச.ந. விக்னேஷ்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு- 638004, தமிழ்நாடு, இந்தியா.

# Dravidian opinion in the view of Ka. Sivathambi

**S.N. Vignesh** [a, *]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: snvignesh97@gmail.com

Received: 19-07-2021
Revised: 05-04-2022
Accepted: 21-04-2022
Published: 29-05-2022

Check for updates

## ABSTRACT

Dravidian ideology has long dominated the history of modern Tamil society. This opinion has grown to the point where it is popularly accepted and won on the electoral path. Therefore, knowing about the development of Dravida is important for everyone. Furthermore, two different perspectives / philosophies are essential to interacting and interacting with one another in the journey to a healthier society. In that sense, the discussions between the Dravidian movement and the Marxists are interesting. Among them, the Marxist scholar Professor Ka. Sivathambi's comments are noteworthy. who wanted to fully understand the Tamil community, continued to talk about Dravidar. He approached the historical development of the Dravidian movement along with the problem for the Tamil community. An attempt is being made here to understand the Dravidian movement based on his book Today's Appropriation of the Dravidian Movement Concept - A Historical Perspective (1999).

**Keywords:** Dravidam, Periyar, K. Sivathambi, Tamil Social History

## முன்னுரை

அதிகாரக் குவிப்பும் ஒற்றைத்தன்மையை வற்புறுத்தும் முழக்கமும் வலுப்பெற்றுள்ள இன்றைய சூழலில் அதற்கு எதிராக, பன்மைத்துவத்தை முன்மொழிவதற்குத் திராவிடக் கருத்துநிலையை ஆயுதமாகக் கொள்வது பற்றிய திறந்த உரையாடல் அவசியமானது. அத்தகைய புறவயமான உரையாடலில் திராவிட இயக்கக் கருத்துநிலை பற்றிய சிவத்தம்பியின் அவதானிப்புகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுவன. திராவிட இயக்கக் கருத்துநிலையின் இன்றைய பொருத்தப்பாடு எனும் நீண்ட கட்டுரை திராவிடக் கருத்துநிலையின் சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தளத்தைப் பற்றிய விரிவான உரையாடலுக்கான தொடக்கக் குறிப்புகளைக் கொண்டதாக அமைகிறது. இருபது ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் அவருடைய கருத்துகள் இன்றைக்கும் பொருந்துவனவாக உள்ளன.

## கா. சிவத்தம்பி

மார்க்சியத் தத்துவத்தின் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தைக் கருவியாகக்கொண்டு தமிழ்ச்சமூக, இலக்கிய, பண்பாட்டு வரலாற்றை முழுமையாகப் புரிந்துகொள்ள முயன்றவர். அதன் அங்கமாக, தமிழ்ச் சமூகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய நிகழ்வுகளைக்குறித்து ஆழமான ஆய்வுகளைச் செய்துள்ளார். பாரதி: மறைவு முதல் மகாகவி வரை, தமிழ்ப் பண்பாட்டின் மீள்கண்டுபிடிப்பும் நவீனவாக்கமும், தமிழ்நூற் பதிப்புப் பணியில் உ.வே.சா: பாட விமர்சனவியல் நோக்கு, தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி, நவீனத்துவம் - தமிழ் - பின்நவீனத்துவம்

முதலான நூல்களை உதாரணமாகக் கொள்ளலாம். 1994-ஆம் ஆண்டு நடைபெற்ற 'திராவிட இயக்கமும் கருத்தியலும்: நோக்குகளும் போக்குகளும்' எனும் கருத்தரங்கில் தொடக்க உரையாக அமைந்த 'திராவிட இயக்கக் கருத்துநிலையின் இன்றைய பொருத்தப்பாடு - ஒரு வரலாற்று நோக்கு' எனும் கட்டுரையும் இத்தன்மையதே. இன்று நமக்கு இருக்கும் சிக்கல்களைப் புரிந்துகொள்வதற்கும் எதிர்கொள்வதற்கும் 'திராவிடம்' எந்த அளவிற்குத் துணைநிற்கிறது? என்பதை அடிப்படைக் கேள்வியாக எழுப்பிக்கொண்டு, திராவிட இயக்கக் கருத்துநிலையின் வரலாற்றை ஆராய்கிறார். அனைத்திந்திய மட்டத்திலிருந்து அணுகப்படும் இவ்வாய்வு செறிவுமிக்கதாக உள்ளது.

இன்றைய நிலையில் தமிழ்த் தேசியத்தைத் திராவிடத்தோடு முரண்பட்டதாகக்கொள்ளும் போக்கு பரவலாக உள்ளது. ஆனால், ஒரு கருத்துநிலையாக உருபெறத் தொடங்கியதிலிருந்து 90கள் வரையிலும் அதற்குச் சற்றுப்பிறகும்கூட திராவிடம் என்பது தமிழ்த்தேசிய உணர்வின் வெளிப்பாடாகவே கொள்ளப்பட்டது. அந்தவகையில், பேராசிரியர் சிவத்தம்பியின் 'தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி' என்ற நூல்களின் தொடர்ச்சியாகவே இக்கட்டுரை அமைகிறது. மேலும், சிவத்தம்பியின் ஆய்வுகளை மொத்தமாக நோக்கும்பொழுது, திராவிட இயக்கத்தின் செயல்பாடு குறித்துத் தொடர்ந்து உரையாடியுள்ளதை அறிய முடிகிறது (Karthigesu Sivathamby, 1999).

## திராவிடம் - திராவிடர்

இன்றைய சூழலில் திராவிடம் எனப் பேச முற்படும்போது திராவிடம் / திராவிடர் என்பது யாரைப்பற்றியது என்பதிலிருந்து தொடங்கவேண்டியுள்ளது. திராவிடம் எனும் எண்ணக்கரு இந்தியாவைப்பற்றிய காலனித்துவ வாசிப்பில் உருக்கொண்டு வளர்ந்த ஒன்றாகும். 'பழங்காலத்தில் ஐரோப்பாவிலிருந்து இந்திய பகுதிகளுக்கு வந்த குழுவினர் இங்குள்ளவர்களுக்கு நாகரிகத்தைக் கற்பித்தனர்' என்ற தன்மைகொண்ட மாக்ஸ்முல்லர் முதலானோரின் கருத்துகளிலிருந்து வேறுபட்டது திராவிடக்கருத்து.

இந்திய வரலாறெழுதியலில் இந்தத் தொடர், தென்னிந்தியாவின் பிரிநிலைத் தன்மையையும் தமிழரின் தனித்துவத்தையும் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது. 'திராவிடம்' என்பது 'ஆரிய'த்தின் எதிர்நிலையாகக் கொள்ளப்பட்டது (Karthigesu Sivathamby, 1999).

எனப் பேராசிரியர் குறிப்பிடுகிறார். மேலும், பார்ப்பன மேலாண்மையை மறுப்பதற்குத் 'தமிழர்' என்பதை விடவும் 'திராவிடர்' எனக் குறிக்கப்படுவதே பொருத்தமானது எனக் கருதப்படுவதையும் சுட்டுகிறார்.

இந்தியாவிற்கு ஆரியர்கள் வருவதற்கு முன்பே, சிறப்புற்றிருந்த சிந்துவெளி நாகரிகத்தை நினைவுகூர்வதற்கும் ஆரிய மேலாண்மைக்குட்படாத சங்ககாலத் தமிழ்நாகரிகத்தின் புகழைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுவதையும் சிவத்தம்பி கவனப்படுத்துகிறார். 'ஆரியர் வருகைக்கு முற்பட்டது திராவிடம்' எனும் எடுகோளுக்கு சாதிஒழிப்புக்கான தளத்தில் மிகமுக்கியமான இடம் உண்டு. 'சாதியமைப்பு எல்லாக்காலத்திலும் இருந்த ஒன்றல்ல அது இடைக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது' என்பதை நினைவுபடுத்திக்கொள்வதன் மூலம் சாதியத்திற்கு எதிரான போராட்டத்தில் உளவியல்ரீதியான உந்துதலைப் பெறமுடிகிறது. இந்த வகையில் பேராசிரியர் கவனப்படுத்துபவை முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்திய அளவில் கிருத்துவ மதத்தை மாதிரியாகக்கொண்டு இந்துமதம் கட்டமைக்கப்பட்டபோது தமிழ்ச்சூழலில் திராவிடக் கருத்துநிலையைக்கொண்டே அது எதிர்கொள்ளப்பட்டது. பௌத்தத் தமிழை மீட்டுருவாக்கிய அயோத்திதாச பண்டிதர், சாதிபேதமற்ற தமிழரே திராவிடர் என்றார். சைவமே தமிழ்ப்பண்பாடு எனக் கட்டமைக்க முயன்றவரும் திராவிடக் கருத்துநிலையை உள்வாங்கியவருமான பெ. சுந்தரம்பிள்ளையும் அவர்தம் குழுவினரும் சைவர்கள் இந்துக்கள் அல்லர் சைவத்தில் சாதி இல்லை என்ற கருத்துநிலையைக் கொண்டிருந்தனர். இதனை, வெள்ளக்கால் சுப்ரமணிய முதலியார் எழுதிய 'இராமாயண உள்ளுறைப் பொருளும் தென்னிந்திய சாதி உருவாக்கமும்' நூலில் தெளிவாகக் காணலாம். எனவே, 'திராவிடம் சாதியத்திற்கு எதிரானது' என்று அதன் தோற்றகாலத்திலிருந்தே

புரிந்துகொள்ளப்பட்டதை அறியமுடிகிறது. அந்தவகையில், திராவிடம் / திராவிடர் பற்றிய சிவத்தம்பியின் அவதானிப்புகள் சரியாகவே உள்ளது.

## திராவிடம்: வரலாற்று வளர்ச்சி

காலனித்துவ வாசிப்பின் விளைவால் வளர்ந்த திராவிடக் கருத்தாக்கம் சுயமரியாதை இயக்கத்தின் வருகையால் மிகப்பெரிய வளர்ச்சியடைந்தது எனலாம். இன்று திராவிடர் எனும் அடை சுயமரியாதை இயக்கத்தின் வழிவந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களைக் குறிப்பதாகவே கொள்ளப்படுகிறது. சுயமரியாதை இயக்கம் பகுத்தறிவுவாதம், நாத்திகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மதத்தை முற்றாக நிராகரித்தது. பெரியாரின் நாத்திக, பகுத்தறிவு வாதத்திற்கு மேற்கத்திய சூழலே அடிப்படை எனச் சிவத்தம்பி கருதுகிறார். எனினும், பெரியாரின் தத்துவக் கருத்தாக்கம் குறித்த இன்றைய ஆய்வுகள் 'பெரியார் இந்திய மரபில் வேர்கொண்டு, மேற்கத்திய சிந்தனைகளைத் தன்வயப்படுத்திக் கொண்டார்' என்று கூறுவதையும் கவனத்தில்கொள்ள வேண்டியுள்ளது (Kamarasan, 2020).

1944இல் சுயமரியாதை இயக்கமும் நீதிக்கட்சியும் இணைந்து திராவிடர் கழகம் உருவாகியது. 'திராவிட நாடு' இக்கழகத்தின் முதன்மையான இலக்கானது. மேலும், அண்ணாவின் வருகை இவ்வியக்கத்தை வெகுசனத்திற்கு நெருக்கமான அமைப்பாக ஆக்கியது.

இந்திய விடுதலை என்று குறிக்கப்படும் ஐரோப்பியரின் நேரடி ஆளுகையிலிருந்து இந்தியா விடுபட்ட பிறகு திராவிட இயக்கத்தில் பிளவு ஏற்படுகிறது. பெரியாரோடு முரண்பட்ட அண்ணாதுரை திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்குகிறார். இந்தப் பிளவுபற்றி எழுதப்பட்ட 'ஆகஸ்ட் 15: இன்பநாள் - துக்க நாள்', 'பெரியார்: ஆகஸ்ட் 15' என்ற நூல்கள் முக்கியமானவை. இந்தப் பிளவு திராவிடக் கருத்துநிலையில் பலவீனத்தை உண்டாக்கியதாக சிவத்தம்பி கருதுகிறார். ஏனெனில் தி.மு.க., தேர்தல் அரசியலில் பங்கெடுக்கத் தீர்மானித்ததால் திராவிடநாடு கோரிக்கையையும் நாத்திகவாதத்தையும் கைவிட நேர்ந்தது. திராவிடக் கருத்துநிலை எவற்றையெல்லாம் நிராகரித்ததோ / மறுத்ததோ அவற்றோடு எல்லாம் சமரசம் செய்துகொள்ளவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டதைப் பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார். மேலும், இந்திய தேசியத்தோடு கலந்துவிடும் தன்மையிலான ஒரு கட்சியின் உருவாக்கம் (அ.தி.மு.க.) என்பது தேர்தல் அரசியலில் ஈடுபடுதல் எனும் தி.மு.க. எடுத்த தீர்மானத்தின் தவிர்க்க முடியாத விளைவு என்று சிவத்தம்பி கருதுகிறார். அ.தி.மு.க.வின் உருவாக்கம் திராவிடக் கருத்துநிலையில் ஏற்பட்ட மிகப்பெரிய சிதைவு என்றே குறிப்பிடுகிறார். இன்றைய ஆய்வாளர்கள் திராவிட இயக்கம் என்று குறிப்பிடும்போது அ.தி.மு.க.வை உள்ளடக்குவதில்லை என்பது கவனிக்கத்தக்கது.

## திராவிட இயக்கத்தின் தேர்தல் அரசியல்

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அரசியலில் ஈடுபட்டதை முக்கியமான நகர்வாகவே கருத வேண்டியுள்ளது. இந்திய அளவில் காங்கிரஸின் மேலாண்மை கேள்விக்குட்படுத்தப்பட்டதும் பிரதேச ரீதியான முக்கியத்துவம் வலியுறுத்தப்படத் தொடங்கியதும் தமிழகத்தில்தான் என்று சிவத்தம்பி குறிப்பிடுகிறார். அரசியல் களத்தில், தி.மு.க.வின் கீழிருந்து அணிதிரட்டல் எனும் அணுகுமுறை அவ்வியக்கத்திற்கு மிகப்பெரிய பலத்தைத் தந்தது.

மாநிலக் கட்சிகளின் தோற்றம் தேசியகட்சிகளுக்கு விசித்திரமான நெருக்கடியை ஏற்படுத்தியது. மாநிலங்களுக்கு இடையிலான முரண்களைத் தேசிய கட்சிகள் எதிர்கொண்டவிதம் சுவாரசியமானது எனச் சிவத்தம்பி குறிப்பிடுகிறார். அக்கட்சிகள் தேசிய அளவில் ஒருமித்த முடிவை எடுக்காமல் அந்தந்த மாநிலங்களில் அந்த மாநிலத்துக்கு ஆதரவான நிலையை வெளிப்படுத்தின.

## திராவிட ஆட்சி

1967 முதல் இன்றுவரை தமிழ்நாடு மாநிலக் கட்சிகளாலேயே ஆளப்பட்டு வருகிறது. அரசாட்சி நடத்தும் அமைப்பாக வளர்ந்த திராவிட இயக்கத்தின் செயல்பாடு குறித்து சிவத்தம்பியின் விமர்சனத்தை மிக உன்னிப்பாக எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

சாதி மறுப்புத் திருமணத்திற்குச் சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்குதல், இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தியவிதம் ஆகிய செயல்பாடுகள் திராவிட இயக்க ஆட்சியின் தனித்துவம் எனலாம். திராவிட இயக்கத்தின் மக்கள்நலத் திட்டங்கள், பொது விநியோகமுறை முதலியன கிராமப்புற ஏழைமக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியபோதிலும் அவை வெகுசன கவர்ச்சி அரசியலாகவே இருந்தன. திராவிட இயக்கத்துக்குத் திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கை இருக்கவில்லை. இதைச் சிவத்தம்பி மிக வன்மையாகவே விமர்சிக்கிறார். இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு, அரசு அலுவலகங்களில் பார்ப்பனரல்லாதார் முதன்மைபெறத் தொடங்கியபின் திராவிட இயக்கத்துக்கு ஏற்பட்ட சிக்கலைப்பற்றியும் பேராசிரியர் கவனப்படுத்துகிறார்.

தமிழ்நாட்டில் எந்த இயக்கம் ஒரு குறிப்பிட்ட சாதியின் சமூக - பண்பாட்டு மேலாண்மையை மறுதலித்துத் தொழிற்பட்டதோ அதே இயக்கம், சமத்துவம் பேணப்படவேண்டிய இடை, அடிநிலைகளிற் சாதியுணர்வை மிக வன்மைப்படுத்தியுள்ளது. இதன் காரணமாகத் தமிழ்நாட்டின் நவீனகால வரலாற்றில் சாதிக்கலவரம் என்பது ஒரு தொடர்ச்சியான அம்சமாகக் காணப்படுகின்றது.

இந்தச் சாதிக் கலவரங்களின் ஒரு மறக்கக்கூடாத அமிசம், இக்கலவரங்கள் சமூக மேனிலைப்பாட்டை அவாவுகின்ற குழுமங்களுக்கும் / குழுமத்துக்கும், அவர்களுக்கு நேரடியாக மேலேயுள்ள சாதிகளுக்கிடையேயுமான ஒரு போராகவே புலப்பதிவு செய்யப்படுகிறது (Karthigesu Sivathamby, 1999).

பொருளியல் சார்ந்த நிகழ்ச்சிநிரல் இல்லாததால் சமூக - பொருளாதார அடிப்படையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாதுபோனமையே இதற்குக் காரணம் என்கிறார்.

கெடுவாய்ப்பாக திராவிட இயக்கம் இன்றளவும் தனக்கென ஒரு திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கையைக் கைக்கொள்ளாமல் சனவிருப்புவாத (Populist) போக்கினையே கொண்டுள்ளது. தொலைநோக்குப் பார்வை கொண்ட பொருளியல் கொள்கையைக் கூடியவிரைவில் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

## சாதிக் கலவரம்

1990களில் தமிழகத்தில் ஏற்பட்ட தொடர் சாதிக் கலவரங்கள் திராவிடக் கருத்துநிலையின் பரவல் தன்மை பற்றிய விசாரணை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தின என்றே கூற வேண்டும். அதுமட்டுமின்றி, இக்கலவரங்களைத் திராவிட இயக்க அரசு எதிர்கொண்ட விதம் மிகவும் பிற்போக்குத்தனமானது. 'கீழிருந்து அணிதிரட்டல் என்பதாக இல்லாமல் மேலிருந்து நிர்வாகத் தலையீடுகளை மேற்கொள்ளுதல்' என்பதாக முடங்கின (Pandian, 1997).

'இருதரப்பினரிடையே மோதல்' என்பதைவிட 'சாதிக் கலவரம்' என்பது ஓரளவு சரியானது என்றபோதிலும், உண்மையில் இவை பட்டியலின மக்களின் மீது ஆதிக்க சாதியினர் நிகழ்த்திய வன்முறைகளே ஆகும். ஏனெனில், இக்கலவரங்களில் பட்டியலின மக்களின் உடைமைகள் போலீஸ் துணையுடன் முற்றாக அழிக்கப்பட்டன. அதேநேரத்தில், பட்டியலின மக்கள் எதிர்த்தாக்குதலில் தொடர்ந்து ஈடுபட்டதையும் நினைவில் கொள்ள வேண்டும். எதிர்த்தாக்குதலின் வீரியமும் காலமும் அடுத்தடுத்த கலவரங்களில் அதிகரித்தது. இக்கலவரங்களுக்கான காரணங்களாகச் சிவத்தம்பியின் கருத்துகளை முன்னரே கண்டோம். அதுமட்டுமின்றி,

திராவிட இயக்கம் தான்மேற்கொண்ட 'பிராமணரல்லாத சமூகங்களின் சனநாயகமயவாக்கம்' என்ற நோக்கின் தர்க்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்திருந்தால், அது ஒடுக்கப்பட்ட தமிழ்க் குழுமங்களுக்குச் சென்றிருத்தல் வேண்டும். ஆனால், அந்த நடைமுறை பூரணப்படவில்லை என்பதை

இன்றைய நிலையிலிருந்து மீளநோக்கும் பொழுது ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அந்த வரலாற்றுப் பணி நிறைவேற்றப்படாது கிடக்கின்றது (Karthigesu Sivathamby, 1999).

எனவும் குறிப்பிடுகின்றார். மேலும், படிநிலைச் சமூக அமைப்பில் வேகவிரைவற்ற படிப்படியான சனநாயகமயவாக்கத்தை மேற்கொண்ட திராவிட இயக்கத்தின் பணி இடைநிலைச் சாதிகளோடு நின்றுவிட்டதோ என ஐயுறுகிறார்.

தன்மீது இதுவரை எழுந்த விமர்சனங்களைக் கவனத்தில் கொண்டு ஆட்சியைத் தொடங்கியிருக்கும் இன்றைய திராவிட இயக்கம் பட்டியலின மக்களின் பிரச்சனைகளை அணுகும் முறையில் பெரிய அளவில் மாற்றத்தைக் கைக்கொள்ளவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. பிரச்சனையைப் பேசி 'முடித்துவைத்தல்', சமூக வலைத்தளங்களில் பெரிய அளவில் விமர்சனம் எழுந்த பிறகு நடவடிக்கை எடுத்தல் போன்ற போக்குகளை மட்டுமே காண முடிகிறது.

## தமிழ்ப் பண்பாடு

ஐரோப்பியரின் வருகைக்கு முன்னர் தமிழர்களுக்குத் தமது பண்பாடு குறித்த விழிப்புணர்வு இல்லை என்றே கூறலாம். ஐரோப்பியரின் வருகையால் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னரே பல குழுவினரால் பல்வேறு வகையில் தமிழ்ப் பண்பாடு மறுகட்டமைக்கப்பட்டது. இப்போக்கில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பு மிகமுக்கியமானது.

ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் தமிழ்நாடு சிறுசிறு ஊர்களாகப் பிளவுண்டு கிடந்தது. 1800களில் பிரிட்டிஷ் இந்தியாவின் அங்கமாகச் சென்னை மாகாணம் (Madras Presidency) தோற்றுவிக்கப்பட்டது. இது முற்றிலும் புதிய நிர்வாக அலகு என்பதால், தமிழ் முதலான மொழி பேசும் மக்களுக்குத் தம் இனத்தனித்துவத்தை நிறுவ வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன்பின்னரே தமிழ்ச் சமூக வரலாறு, பண்பாட்டு வரலாறு குறித்த பிரக்ஞை அதிகரிக்கிறது.

திராவிட இயக்கம் தமிழ்ப் பண்பாட்டை மதச் சார்பற்றதாக மீள் கண்டுபிடித்தது. தமிழ்ப் பண்பாட்டிற்கான அடிப்படைக் கருவூலங்களாகச் சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அவற்றின் சமயச் சார்பற்ற தன்மையையும் சமயப் பொதுமையையும் வலியுறுத்தியது. இவ்விலக்கியங்களை வெகுமக்கள்மயப்படுத்தியதில் திராவிட இயக்க மேடைப் பேச்சின் பங்கு அளப்பரியது. இவற்றை திராவிட இயக்கத்தின் மிகப்பெரிய சாதனையாகவே சிவத்தம்பி மதிப்பிடுகிறார். இதுகுறித்து இந்நூலில் குறிப்புகளாகச் சொல்லப்பட்டிருந்தாலும் 'தமிழ்ப் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும் நவீனவாக்கமும்' (1989) நூலில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

## திராவிட இயக்கமும் மதமும்

நாத்திகம், பகுத்தறிவுவாதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட திராவிட இயக்கம் மதத்தை முற்றாக நிராகரித்தது. படிநிலை அமைப்பு இறுகிய சமூகத்தில் மதத்தை நிராகரித்தல் என்பது சமூகத்தில் அதன் இடத்தை / தேவையைச் சரியாகப் புரிந்துகொள்ளாததன் விளைவு என்றே கருத வேண்டும். மதத்தை நிராகரித்த திராவிட இயக்கம் அதற்கு மாற்றாக ஒரு புதிய பண்பாட்டைக் கட்டமைக்காதது தேக்கநிலையை ஏற்படுத்தியது என்று சிவத்தம்பி குறிப்பிடுகிறார். 1980களில் உருவான இந்து மீட்புவாதத்தைத் திராவிட இயக்கத்தால் சரியாக எதிர்கொள்ள முடியாமல் போனதைக் கவனப்படுத்துகிறார்.

மதத்தை முழுமையாக நிராகரித்து மதமற்ற நிலையை வலியுறுத்திய திராவிட இயக்கம் இன்று இந்து வேறு இந்துத்துவம் வேறு என்ற இடத்திற்கு நகர்ந்துவிட்டது. இது நிச்சயமாக மிகப்பெரிய பின்னடைவாகும். எனவே, இந்திய அளவில் வர்ண அமைப்பை எதிர்கொள்வதற்கான மாதிரியமாகத் திராவிடம் வளரவில்லை எனச் சிவத்தம்பி கருதுவது நியாயமானதாகவே கொள்ளவேண்டியுள்ளது.

## பெரியார்: மீள் கண்டுபிடிப்பு

தமிழ்ச் சூழலில் நீண்டகாலமாக இயங்கிவரும் திராவிட இயக்கக் கருத்துநிலை குறித்த வரலாறு தமிழில் எழுதப்படத் தொடங்கியது 1990களில் தான் என்பது ஆச்சரியமான உண்மையாகும். இக்காலகட்டத்தில் எழுதப்படத் தொடங்குவதற்குச் சர்வதேச அளவிலும் உள்ளூர் அளவிலும் காரணங்கள் உண்டு.

சர்வதேச அளவில் கம்யூனிசத்திற்கு ஏற்பட்ட சரிவு, தேசிய இனப் பிரச்சனையைப் பற்றிக் கூடுதல் கவனத்தைக் கொள்ள வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இதனால், அந்தந்த பகுதிகளில் எழுந்த சமூக சிந்தனையாளர்களைக் குறித்த பார்வை இடதுசாரிகளிடம் மாற்றமடைந்தது. இதனால், திராவிடம் குறித்தும் பெரியார் குறித்தும் மார்க்சியர்கள் கணிசமான ஆய்வை மேற்கொண்டனர்.

1990களில் தமிழகத்தில் ஏற்பட்ட தொடர் சாதிக்கலவரம் திராவிடம் எந்த அளவிற்கு அடிநிலையில் பரவியுள்ளது என்ற கேள்வியை எழுப்பியது. இது திராவிட இயக்கச் செயல்பாட்டை மறுவிசாரணை செய்யவேண்டிய தேவையை ஏற்படுத்தியது.

இக்காரணங்களால் திராவிட இயக்கம் குறித்த ஆய்வுகள் எழுந்த அதேநேரத்தில், வேறொரு புதிய போக்கும் உருவானது. திராவிட இயக்கத்திலிருந்து பெரியாரை வேறுபடுத்தி ‘பெரியாரியம்’ கட்டமைக்கப்பட்டது. நிறப்பிரிகைக் குழுவினர் எனக் குறிக்கப்பட்ட ரவிக்குமார், பொ.வேல்சாமி, அ.மார்க்ஸ் ஆகியோர் இத்தன்மையில் இயங்கினர்.

நிறுவனம், மையம், ஒழுங்கு முதலானவற்றை நிராகரிக்கும் பின்நவீனத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கிய நிறப்பிரிகைக் குழுவினரை எல்லாவிதமான அதிகாரத்தையும் எதிர்த்த பெரியார் ஈர்த்தது இயல்பானதே. தமிழ்ச் சமூகத்தில் - அதன் சகல மட்டத்திலும் - மதநீக்கம் செய்ததையே பெரியாரின் சாதனைகளுள் முதன்மையானதாகக் குறிப்பிடுகின்றனர். பெரியாரியம் என்பது சுயமரியாதை, சமதர்மம் என்கிறார் (Marx Ravikumar, 1995).

திராவிடத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட திராவிட இயக்க ஆய்வுகளின் சமூக, பொருளாதார அடிப்படையை விரிவான மேலாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்கிறார் (Karthigesu Sivathamby, 1999).

## முடிவுரை

முன்னரே குறிப்பிட்டது போல, பேராசிரியர் சிவத்தம்பி தமிழ்ச் சமூக அசைவியக்கத்தைப் புரிந்துகொள்வதன் அங்கமாக திராவிட இயக்கக் கருத்துநிலையைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டார். மிகவிரிவாக அமைந்திருக்க வேண்டிய இந்நூல் ஒரு கருத்தரங்கின் தொடக்க உரையாக அமைந்ததால் சிறு குறிப்பாக உருவாக்கப்பட்டது. எனினும் திராவிடம் குறித்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு இது முதன்மையான கருவிநூலாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இந்தியாவில் எழுச்சி பெற்ற பார்ப்பனரல்லாதார் இயக்கங்களுள் இந்துத்துவத்தை எதிர்க்கும் இயக்கமாக நீடிப்பது திராவிட இயக்கம் மட்டுமே என அவ்வியக்க ஆதரவாளர்கள் பெருமை கொள்கின்றனர். திராவிட இயக்கக் கருத்துநிலையின் தேவை இன்று அதிகரித்துள்ளது உண்மையே. எனினும், அது தேக்கமடைந்து பின்னடைவைச் சத்தித்துள்ளதைச் சிவத்தம்பியின் ஆய்வுகளிலிருந்தும் சமகால நிகழ்வுகளிலிருந்தும் அறிய முடிகிறது. விருப்பு வெறுப்புகளைக் கடந்த உரையாடல் மூலம் திராவிட இயக்கக் கருத்துநிலையை வளர்த்தெடுக்க வேண்டும்.

## References

Kamarasan, K., (2020) periyarum sila thaththuva visaaranaigalum, Bharathi Puthakalayam, Chennai, India.

Karthigesu Sivathamby, (1994) Tamil Samoogamum panpaattin Meel Kandupidippugalum, New Century Book House, Chennai, India.

Karthigesu Sivathamby, (1999) Today's relevance of Dravidian movement ideology - A historical perspective, Makkal Veliyedu, Chennai, India.

Marx Ravikumar, A., Velsamy, P., (1995) Periyariyam (Nirapirigai Katturaigal), Vidiyal Pathippagam, Coimbatore, India.

Pandian, M. S. S., (1997) Then Maavatta Kalavarangal: Yematram Amaithi, Nirapirigai Ethal 9, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License